


கோத்தகிரி ஒன்றியம் கோத்தகிரி பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம் கோத்தகிரி பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜ் தலைமையில் நடைபெற்றது. கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் வரவேற்றார், மாவட்ட அவை தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் Expo செந்தில், கோத்தகிரி பேரூர் செயலாளர் காளிதாஸ், கோத்தகிரி நகராட்சி தலைவர் ஜெயக்குமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், கழக ஆக்க பணிகள் மற்றும் எதிர்வரும் அனைத்து தேர்தல்களிலும் நூறு சதவீத வெற்றிபெற மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில், ஒன்றிய அவைத் தலைவர் கில்பர்ட், ஒன்றிய துணை செயலாளர்கள் கணபதி, ஸ்டுடியோ செல்வம், ஜான்சி ராணி, ஒன்றிய பொருளாளர் நடேசன், பேரூர் கழக துணை செயலாளர்கள் காங்கேயன், தனலட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் சண்முகராஜ், சுசில் ஜீவானந், கிருஷ்ணன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விவேகானந்தன், கழக மூத்த முன்னோடிகள் பி.எல்.ஆரி, சுப்பு, நல்லுசாமி, கண்ணம்மா உட்பட அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள் பிரதிநிதிகள், கழக செயல் வீரர்கள் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் பேரூர் கழக பொருளாளர் சிங்காரவேல் நன்றி கூறினார்.




தஞ்சை மாவட்டம், கும்பகோணம் காசிராமன் தெருவில் உள்ள கிருஷ்ணா பள்ளியில் கடந்த 2004ம் ஆண்டு ஜூலை 16ந் தேதி ஏற்பட்ட தீ விபத்தில் 94 குழந்தைகள் உடல் கருகி இறந்தனர். இந்த துயரச் சம்பவத்தின் 22 வது நினைவு நாளில், அவர்கள் படித்த பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 94பிள்ளைகளின் திருவுருவப் படத்திற்கு தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், செ இராமலிங்கம், கோ.வி.செழியன் எம்.எல்.ஏ மற்றும் கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகர நிர்வாகிகள்,பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல குழு தலைவர்கள், கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

### நாடாளுமன்றத்தில் மீண்டும் FCRA மசோதா

# 7 மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய அரசு முடிவு!

புதுடெல்லி, ஜூலை 18-

வருகின்ற 20ஆம் தேதி தொடங்க உள்ள நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் FCRA உள்ளிட்ட 7 மசோதாக்களை தாக்கல் செய்ய உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெற உள்ளது. 23 லட்சம் மாணவர்களின் கனவை நசுக்கிய நீட் வினாத்தாள் கசிவு, 17 லட்சம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு பிரச்னையை ஏற்படுத்திய சி.பி.எஸ்.இ. பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் நடந்த குளறுபடி, அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு, ஈரான்அமெரிக்கா போரில் 13 இந்தியர்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாடாளுமன்றத்தை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க 19ம் தேதி அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் , நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் FCRA எனும் நிதி திருத்த மசோதா, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 37 ஆக உயர்த்துவது தொடர்பான மசோதா உள்ளிட்ட 7 மசோதாக்களை தாக்கல் செய்ய உள்ளதாக

ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள மசோதா தொடர்பான பட்டியலில், நாடாளுமன்ற தொகுதி மறு சீரமைப்பு மசோதா இடம்பெறவில்லை.

### கொடுங்கையூர் குப்பைக் கிடங்கு அருகே கட்டுமானக் கழிவுகளால்

# 75 சதவிகிதம் தூர்ந்துவிட்ட பக்கிங்காம் கால்வாய்!

## வடசென்னைக்கு வெள்ள அபாயம் !

சென்னை, ஜூலை 18-

கொடுங்கையூர் குப்பை கிடங்கு அருகே பக்கிங்காம் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், வடகிழக்கு பருவ மழையின்போது, வடசென்னை மக்கள் வெள்ள பாதிப்பில் தவிக்கும் அபாயம் உள்ளது.

ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னையில் உள்ள நீர்வழி கால்வாய்களில் தூர்வாரும் பணிகளை மாநகராட்சி நிர்வாகம் செய்வது வழக்கம். குறிப்பாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புதிய மழைநீர் வடிகால்கள் அமைப்பது, ஏற்கனவே உள்ள வடிகால்களில் வண்டல் கழிவுகளை அகற்றுவது, நீர்நிலை மற்றும் உபரி நீர் கால்வாய்களை தூர்வாரி, சீரமைப்பது போன்ற பணிகள் நடைபெறும்.

குறிப்பாக கோட்டூர்புரம் அடையாறு ஆறு, ராயபுரம் மண்டலத்தில் வடக்கு பக்கிங்காம் கால்வாய், வேளச்சேரி ஏரி, மணலி ஏரி, திருவிக நகர் மண்டலத்தில் ராஜிவ்காந்தி நகர் அருகிலுள்ள ஏகாங்கிபுரம் கால்வாய், நொளம்பூர் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ரெட்டி குப்பம் கால்வாய், பாடி கால்வாய், சின்னசேக்காடு ஜாகிர் உசேன் கால்வாய், கொடுங்கையூர் கேப்டன் காட்டன் கால்வாய் உள்ளிட்ட முக்கிய கால்வாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வெள்ள பாதிப்பில் இருந்து மக்களை காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், சென்னை மாநகராட்சியின் அலட்சியத்தால் முன்னெச்சரிக்கை பணிகள் சரிவர நடைபெறவில்லை. குறிப்பாக, வட சென்னை பகுதி எந்தவொரு முன்னெச்சரிக்கை பணிகளும் நடைபெறாததால், வரும் மழைக்காலத்தில் கடுமையான வெள்ளப் பேரழிவைச் சந்திக்கும் அபாயம் உள்ளது.

கொடுங்கையூர் குப்பை கிடங்கு அருகே உள்ள மிக முக்கிய வடிகாலாக திகழும் பக்கிங்காம் கால்வாயில், டன் கணக்கில் கட்டுமான கழிவுகளும் மணலும் கொட்டப்பட்டு நீர் வழித்தடம் முற்றிலுமாக தூர்ந்துள்ளது.

### திராவிட மாடல் நல்லாட்சியில் அமைக்கப்பட்டது!

# மணலூர்பேட்டை பேரூராட்சி கலைஞர் பூங்கா!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திடீர் ஆய்வு

வாணாபுரம், ஜூலை 18-

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள கலைஞர் விளையாட்டு பூங்காவை மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ ஆய்வு செய்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மணலூர்பேட்டையில் தென்பெண்ணையாறு பாலம் அருகே கலைஞர் விளையாட்டு பூங்கா கடந்த நான்கு மாதத்திற்கு முன்பு சுமார் ரூ.60 லட்சம் மதிப்பில் மக்கள் பயன்பாட்டிற்காக திராவிட மாடல் நல்லாட்சியில் அமைக்கப்கப்பட்டது.

இந்த பூங்காவை மணலூர்பேட்டை சித்தப்பட்டிணம், ஆதிதிருவரங்கம் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஜூலை 16 வியாழக்கிழமை அன்று கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் திடீரென்று பூங்காவை ஆய்வு செய்து அதில் உள்ள குறைபாடுகளை உடனடியாக சரி செய்யும்படி பேரூராட்சி அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். அப்போது மணலூர்பேட்டை பேரூராட்சி மன்ற தலைவர் ரேவதி ஜெய்கணேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள்

அரியூர் ராஜேந்திரன், செட்டித்தாங்கல் அய்யனார். பூமாரி கிருஷ்ணமூர்த்தி, பேரூர் கழக செயலாளர் ஜெய்கணேஷ், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் தம்பிதுரை, நகர கழக துணைச் செயலாளர் சரவணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.கே.ஆர்.ராஜீவ் காந்தி, பாலாஜி பூபதி, உதயா, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் அம்மு. ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடன் கலந்து கொண்டனர்.

### இரவு நேர வெப்பம் அதிகரிப்பு!

# தூக்கத்தை இழந்த தமிழ்நாட்டு மக்கள்!

## ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்!

புதுடில்லி, ஜூலை 18-

உலகையே அச்சுறுத்தி வரும் பருவநிலை மாற்றத்தின் நேரடிப் பாதிப்பாக, இந்தியாவில் இரவு நேர வெப்பம் அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்படும் தூக்க இழப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளதாக ‘கிளைமேட் சென்ட்ரல்’ அமைப்பின் புதிய ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.

இரவு நேரங்களில் வெப்பம் தணியாமல் அதிகரிப்பதால், தமிழ்நாட்டு மக்கள் ஆண்டுக்குச் சராசரியாக 84 மணி நேர தூக்கத்தை இழக்கிறார்கள் என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

உலகளாவிய பாதிப்பு: 2020 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், உலகளவில் இரவு நேர வெப்பம் காரணமாக ஒரு நபர் ஆண்டுக்குச் சராசரியாக 56 மணி நேர தூக்கத்தை (சுமார் 7 இரவுகள்) இழந்துள்ளார்.

**இந்தியாவின் நிலை:** பருவநிலை மாற்றத்தால் தூக்க இழப்பைச் சந்திக்கும் உலகின் மிக முக்கியப் பகுதிகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது. நாட்டின் 107 நகரங்களில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், தென் மாநிலங்களே இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

**முதலிடத்தில் தமிழ்நாடு:** தமிழ்நாடு மக்கள் ஆண்டுக்கு 84 மணி நேர தூக்கத்தை இழக்கின்றனர். இதில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இரவு நேர வெப்ப அதிகரிப்பினால் மட்டுமே ஒரு நபர் ஆண்டுக்குச் சராசரியாக 7.9 மணி நேர தூக்கத்தை இழக்கிறார்.

**விபரீதங்கள் என்ன?**

உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஒரு நபர் நாளொன்றுக்கு 7 முதல் 9 மணி நேரம் வரை தூங்குவது அவசியமாகும். அவ்வாறு போதிய தூக்கம் கிடைக்காதபோது பின்வரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன:

உடனடிப் பாதிப்புகள்: நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் அன்றாட செயல்பாட்டுத் திறன் குறையும். கவனம் சிதறுவதால் தவறுகள், விபத்துகள் மற்றும் உடல் வலி அதிகரிக்கும்.

நீண்ட காலப் பாதிப்புகள்: உடல் எடை அதிகரிப்பு, நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்), உயர் ரத்த அழுத்தம், இதய நோய்கள் ஏற்படுவதுடன், உயிரிழப்புக்கான ஆபத்தும் கணிசமாக அதிகரிக்கிறது.

இரவு நேர வெப்பம் தொடர்ந்து அதிகரித்து வருவது, வெறும் சுற்றுச்சூழல் பிரச்சனை மட்டுமல்லாமல், மக்களின் வாழ்வாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் சீர்குலைக்கும் ஒரு பொது சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்து வருவதாக இந்த ஆய்வு எச்சரித்துள்ளது.

### நியமனத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 18,775 பேருக்கு நிரந்தரப் பணி வழங்குக!

# கண்ணில் சிவப்பு நிற துணியைக் கட்டி ஆசிரியர்கள் நூதனப் போராட்டம்!

சென்னை, ஜூலை 18-

பணி நியமன ஆணையை வழங்கிட வலியுறுத்தி, சென்னை எழும்பூரில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், கண்ணில் சிவப்பு நிற துணியை கட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு நியமனத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 18 ஆயிரத்து 775 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, மறுதேர்வின்றி பணி நியமனம் வழங்கும் வகையில் புதிய அரசாணை பிறப்பிக்க, தமிழ்நாடு அரசை தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகள் மீது தவெக தலைமையிலான விஜய் அரசு நடவடிக்கை எடுக்காததால், விரக்தி அடைந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பினர், சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2013ம் ஆண்டில் இருந்து 14 ஆண்டுகளில் பலமுறை தகுதித் தேர்வு எழுதியும், தகுதி தேர்வோடு நியமனத் தேர்விலும் தேர்ச்சி 18 ஆயிரத்து 775 ஆசிரியர்கள் பெற்றுள்ள பெற்றுள்ளதாக கூறியுள்ள அவர்கள், சீனியாரிட்டி அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, 200க்கும் மேற்பட்டோர் கண்களில் ரிப்பன் கட்டி நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சியில், திராவிட மாடல் நல்லாட்சியில் அமைக்கப்பட்ட கலைஞர் சிறுவர் விளையாட்டு பூங்காவை ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் (16.07.2026) வியாழக்கிழமை அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சிகாலத்தில் கொண்டு வந்த வேளாங்கண்ணி பேராலயம் செல்லும் நுழைவு பகுதியில் ஆர்ச் மற்றும் அலங்கார விளக்குகள் அமைக்க ரூ.1 கோடியே 88 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இந்த சுற்றுலா மேம்பாட்டு பணிகளை விரைந்து தொடங்கக் கோரி கீழையூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் சோபா மாடல் அரசை கண்டித்து வேளாங்கண்ணி கிழக்கு கடற்கரை சாலை ஆர்ச் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் கிழக்கு கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் வேளாங்கண்ணி பேரூர் கழக செயலாளர் மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி. சார்லஸ், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா,மாவட்டபிரதிநிதி மாரிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்